REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.
மலர் 5] சென்னை: மார்கழி 6௳ சனி (21—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 7௳ ஞாயிறு (22—12—57) [இதழ் 163

சிந்திக்கிறதாம் திட்டக் குழு!

புதுடில்லி, டிச. 20—
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிலாவது, 6 முதல் 11 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க முடியுமா என்பது பற்றி திட்டக் குழு சிந்தித்துக்கொண்டிருப்பதாக கல்வி இலாகா மந்திரி டாக்டர் கே. எஸ். ஸ்ரீமாலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"அரசியல் சட்ட விதிகளின்படி, எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க சர்க்கார் எல்லாவகையாலும் முயற்சித்துக்கொண்டிருந்தபோதிலும் இரண்டாம் திட்ட காலத்திற்குள் அது சாத்தியமாயிருக்கும் என்று கூறமுடியாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் பற்றிய...

'வெள்ளை அறிக்கையைக் கொளுத்தவேண்டும்'

சென்னை நகரசபைக் கூட்டத்தில் காங்கிரசார் பேச்சு

கொஞ்சநஞ்ச அதிகாரங்களையும் அபகரிப்பதாகப் புகார்

பாசிசபாணி சமுதாயமே ஏற்படுமென எச்சரிக்கை

சென்னை, டிச. 21—
ஸ்தல ஸ்தாபனங்களை மாற்றியமைப்பது பற்றிய சர்க்காரின் வெள்ளை அறிக்கையை, சென்னை நகர சபையினர் இன்று வன்மையாகத் தாக்கிப் பேசினர்.

ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு, நகர சபையிடமுள்ள கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் பறித்து வருகிற போக்கினை, கட்சி பேதமின்றி பல உறுப்பினர்களும் கண்டித்திருக்கின்றனர்.

காங்கிரஸ் உறுப்பினரான கன்னியப்பன், 'இந்த வெள்ளை அறிக்கையைக் கொளுத்த வேண்டும்' என்று பேசியிருக்கிறார்.

மற்றொரு உறுப்பினரான எம். கே. நாகேந்திரன், 'அப்படி வெள்ளையறிக்கையைக் கொளுத்தும் விழாவிற்கு, தான் தலைமை தாங்க விரும்புவதாக'த் தெரிவித்திருக்கிறார்.

மற்றொருவர், 'வெள்ளை அறிக்கை பற்றி பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 'அட்ஹாக் கமிட்டி'யின் சிபாரிசுகளை சர்க்கார் ஏற்காவிட்டால், எல்லா கவுன்சிலர்களும் இராஜிநாமாச் செய்துவிட வேண்டும்' என்று பேசியிருக்கிறார்.

இன்னொரு உறுப்பினர், 'எல்லா உறுப்பினர்களும், இந்த வெள்ளை அறிக்கைக்கு எதிராக இடைவிடாமல் உறுதியாகப் போராடவேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

மற்றொரு காங்கிரசு உறுப்பினர், 'வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள கொள்கை அமுல் செய்யப்பட்டால் ஒரு பாசிச பாணி சமுதாயமே அமையும்' என்று குரல் கொடுத்திருக்கிறார்!

தோழர் வி. முனுசாமி பேசுகையில், 'தேன் தடவிய வார்த்தைகளால் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது; இது, நகர சபையிடமுள்ள கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் அபகரித்துக்கொள்ளுவதாகும்' என்று எச்சரித்திருக்கிறார்.

மூன்று மணி நேர விவாதத்திற்குப் பிறகு, 'வெள்ளை அறிக்கை' சிபாரிசுகளைப் பரிசீலிப்பதற்காக ஒரு 'அட்ஹாக்' கமிட்டியை நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நகரசபை நிறுவியுள்ளது.

எட்டு மாதத்தில் 20,400 பேர் வேலையிழந்தனர்!

பம்பாய், டிச. 20—
1957 ஏப்ரல் முதல் நவம்பர் முடிய எட்டுமாத காலத்தில், பம்பாய் மாநிலத்தில் உள்ள பருத்தி, பட்டு, கம்பளி முதலிய நெசவு ஆலைகள் பல முழுவதுமாகவோ, அல்லது பகுதியோ மூடப்பட்டதின் விளைவாக சுமார் 20,400 தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மேலும் 9,633 தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்று அஞ்சப்படுவதாகவும் காரணம், அவர்கள் பணிபுரியும் ஆலை நிர்வாகிகள், 'ஷிப்டு'களை நீக்கி விடுவதாக மிரட்டியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

தகவல்களை, பம்பாய் சட்ட சபையில், தொழிலாளர் மந்திரி ஷாந்திலால் ஷா தெரிவித்திருக்கிறார்.

அடக்குமுறை ஆயுதம் நீடிப்பதற்குக் கண்டனம்

மாநிலங்கள் சபையில் குன்ஸ்ரு முழக்கம்

புதுடில்லி, டிச. 20—
தடுப்புக் காவல் சட்டம் மேலும் நீடிப்பதை மாநிலங்கள் சபை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இந்த அடக்குமுறை ஆயுதம் மேலும் மூன்றாண்டுகளுக்கு ஆட்சி செலுத்தவேண்டும் என்று சர்க்கார் கொண்டுவந்த மசோதா, மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது தெரிந்ததே!

அது, மாநிலங்கள் சபைக்கு வந்தபோது கடுமையான கண்டனத்திற்காளாகியிருக்கிறது.

டாக்டர் எச். என். குன்ஸ்ரு பேசுகையில், குறிப்பிட்டதாவது:

"இந்தச் சட்டம் முதலில் நிறைவேற்றப்பட்டபோதிருந்ததைவிட இப்போது நிலைமைகள் அடியோடு மாறியிருக்கிறது என்பதை சர்க்காருகூட ஒப்புக்கொள்ளுவர்; அவ்வறிக்கையில், சட்டத்தை நீடிப்பது தேவையானதா விரும்பத்தக்கதா என்பதை சர்க்கார் சிந்திக்கவேண்டும்.

"உள்நாட்டு மந்திரி கூறினார்—'புதிய சட்டம் நிறைவேற்றவில்லையே; இருக்கிற சட்டத்தைத்தானே நீடிக்கிறோம்'—என்று! தொடர்ந்து நீடிப்பதாலேயே, ஒரு தவறு ஆட்சேபத்துக்குரியதாயிருப்பது குறைந்துவிடுமா? அவசர நிலை ஏற்படும்போது சர்க்கார் அதனை உபயோகிக்கிறது என்பதல்ல, எனது குற்றச்சாட்டு; கிரந்தமாக அச்சட்டத்தை புத்தகத்தில் ஏற்றிவிட சர்க்கார் கருதுகிறதே என்பதுதான் எனது குற்றச்சாட்டாகும்.

"இப்போது பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 205; ஆனால் ஐந்தாண்டுகளுக்கு முன்னர், இந்த எண்ணிக்கை 10,000; நிலைமை மாறியுள்ளது என்பதை இது காட்டுவதாகாதா?"

மற்றும் பூபேஷ் குப்தா எச். டி. ராஜா முதலியோரும், சட்டம் நீடிப்பதைக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர்.

பின்தங்கிய நிலையைப் பாருங்கள்!

முதலீட்டு நிதி உதவி தாருங்கள்

டெல்லியிடம் சென்னை மந்திரிகள் முறையீடு

புதுடில்லி, டிச. 20—
"எங்கள் மாநிலம் மிகவும் பின்தங்கிக் கிடப்பது நீங்கள் அறியாததா?

"எங்களுக்கு இரண்டாம் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையே ரூ. 152 26 கோடிதானே?

"இதில், ரெவினியூவகைச் செலவுகளை நாங்கள் சரிக்கட்டிக் கொள்கிறோம்.

"நீங்கள் கொஞ்சம் பெரிய மனது வையுங்கள்! கலங்கி நிற்கும் எங்கள் கண்களைப் பாருங்கள்! எங்கள் நாட்டின் பின்தங்கிய நிலையைக் காணுங்கள்! கொஞ்சம் கருணை காட்டுங்கள்! முதலீட்டுச் செலவுக்கு உதவி செய்யுங்கள்!

என்றெல்லாம் சென்னை சர்க்கார், நிதிமந்திரி கனம் சுப்பிரமணியத்தின் தலைமையில் 'டெல்லி தேவர்'களிடம் முறையிட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முறையிட்டு, தங்களின் 1958—59-ம் ஆண்டிற்கான இரண்டாம் திட்டத்திற்கு அனுமதி பெற்றுச்செல்ல தேவர்களின் திருத்தலத்திற்கு வந்துள்ளனர், சென்னை சர்க்காரின் பிரதிநிதிகள்!

1958—59-ம் ஆண்டில் இரண்டாம் திட்டத்தின்கீழ். ரூ. 35·82 கோடி செலவிட சர்க்கார் உத்தேசித்துள்ளனராம்; இதற்கு அனுமதி பெற்றுப் போக திட்டக் குழுவிடம் வந்திருக்கின்றனர், அவர்கள்!

"வரவு - செலவுத் திட்டத்தில் ரெவினியூ வகைச் செலவுகளை நாங்கள் எங்களிடமுள்ள நிதி வழிகளைக் கொண்டே சரிக்கட்டிவிட முயற்சிக்கிறோம்; நிதிக் கமிஷன் சிபாரிசுக்குப் பிறகு, இப்படிச் செய்ய வேண்டும் என்பதை நாங்கள் முன்பே கூறிவந்திருக்கிறோம்; ஆனால், முதலீட்டுச் செலவுகளுக்கு நீங்கள்தான் உதவியாக வேண்டும்"

என்று, சுப்பிரமணியம், பன்னிப் பன்னி எடுத்துரைத்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால், விளைவு என்ன?

முறையீட்டை டில்லியின் சார்பில் கேட்டுக்கொண்டிருந்த திட்டக் குழுத் துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி,

"நீங்கள்தான் முடிந்தவரை திட்டத்திற்காகப் பணம் திரட்டிக் கொள்ளவேண்டும்; நிதிக் கமிஷன் சிபாரிசுப்படி, மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டி வந்துள்ளது; அதனால், அதனுடைய நிதி ஆதாரங்கள் மிகவும் குறைந்து போய்விட்டன; எனவே, நாங்கள் எவ்வளவு உதவ முடியும் என்பதை இப்போது கூறுவதற்கில்லை; நீங்கள் கொண்டுவந்துள்ள திட்டத்தை அனுமதிப்பது பற்றி பிறகு யோசிப்போம். திட்டத்தை எப்படி உருமாற்றுவது என்பதை இப்போது கூறுவதற்கு இல்லை"

—என்று கூறி விட்டதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது.

நடைமுறையில் சிறிய மாற்றம்!

சென்னை, டிச. 20—
கடைசி சனிக்கிழமைக்கு முந்திய சனிக்கிழமை இப்போது சென்னை சர்க்கார் அலுவலகங்களுக்கு விடுமுறையாக இருந்து வருகிறது; இனி இந்த விடுமுறை, கிராம்ப விடுமுறை நாட்கள் வரும் மாதங்களில் இருக்கக் கூடாது என்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறதாம்.

அதாவது, சனவரி, அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்த விடுமுறை இனி இருக்காது என்று தெரிகிறது.

குண்டுகள் தயாரிக்க மேலும் 100 கோடி டாலர்

வாஷிங்டன், டிச. 20—
கண்டம் தாவித் தாக்கும் குண்டுகள், மற்றும் இதர ஆயுதங்கள் தயாரிப்புக்காக மேலும் 100 கோடி டாலர்வரை ஒதுக்குமாறு அமெரிக்கத் தற்காப்பு இலாகா, காங்கிரசைக் கேட்கும் என்று தற்காப்பு இலாகா மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இதுவும் வடக்கே!

புதுடில்லி, டிச. 20—
இந்தியாவில் பெரிய தையல் இயந்திர உற்பத்திச்சாலை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

பிரபல 'சிங்கர்' தையல் இயந்திர நிறுவனம்' தனியார் துறையில் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வந்துள்ளது.

வழக்கப்படி இதுவும் வடநாட்டில்—பம்பாய் மாநிலத்தில் ஏற்படுத்தப்படும் என்று செய்தி வெளியாகியுள்ளது.

மதுவிலக்குத் திட்டம்: உ. பி. மாநிலத்திலும் தோல்வி

இலட்சுமணபுரி, டிச. 20—
உத்தரப் பிரதேசத்தில் புதிதாக எந்த மாவட்டத்திலும், நகரத்திலும் மதுவிலக்குத் திட்டத்தைப் புகுத்தப்போவதில்லை என்றும், காரணம், இதுவரை புகுத்தப்பட்ட பிரதேசத்தில் திட்டம் வெற்றி பெறவில்லை என்றும், மாநில சட்டசபையில், மந்திரி டாக்டர் சீதாராம் கூறியிருக்கிறார்.

இப்போது மதுவிலக்கு 11 மாவட்டங்களிலும், ஹரித்வார், ரிஷிகேஷ், பிருந்தாவன் ஆகிய மூன்று முக்கிய யாத்திரை ஸ்தலங்களிலும் அமுலிலிருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—12—57 சனி

செயலுருவம் பெறுமா?

"சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தவும், ரேயான் தொழில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தம் செய்யவும் தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.

"சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுவதற்கான நம்பிக்கைகள் நிலவுகிறது.

"நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்தில் கிடைக்கும் பொருளைக் கொண்டு இரசாயன உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கவும் மேற்சொன்ன அடிப்படையில் ஒப்பந்தம் செய்ய பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

"சேலம் அலுமினியத் தொழிற்சாலையையும், நெய்வேலி உரத் தொழிற்சாலையையும் சர்க்காரே நடத்துவதாக ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, சர்க்கார் தமது திட்டத்தைக் கைவிட்டு விட்டனர்."

தென்னக ஆலை முதலாளிகள் சங்கத் தலைவர்தான், மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். வெளிநாடு சென்று வந்த தொழில் துறை உயர்நிலைக் குழுவில் ஒரு உறுப்பினராக அவரும் சென்றுவந்துள்ளார்.

மேட்டூர்ப் பகுதியில் தனியார் துறையில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான நம்பிக்கை நிலவுவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதுபோன்றே, நெய்வேலியில் உர உற்பத்திச்சாலை ஒன்றும் தனியார் துறையில் துவங்குவதற்கான பேச்சுவார்த்தை நடந்துவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

மேற்படி தொழிற்சாலைகள் இரண்டும் எந்த அடிப்படையில் துவங்கப்படக்கூடும் என்பதையும் அவர் விளக்கியுள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாக, கோவையில் ஏற்படுத்தப்பட இருக்கும் ரேயான் தொழிற்சாலையின் அடிப்படை உண்மையை குறிப்பிட்டிருக்கிறார்.

அது, இது :—

'கோவையில் ரேயான் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக அயல்நாட்டு சர்க்காருடனும், தனி நிறுவனத்துடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. ரூ. 5 கோடி மூலதனத்தை, ஒப்பந்தப்படி அவர்களே முதலீடு செய்வார்கள். 1961-ம் ஆண்டு ஏப்ரலிலிருந்து தவணை முறையில் இத்தொகையைத் திருப்பித்தர வேண்டும். நூற்றுக்கு நூறு அயல்நாட்டு மூலதனத்துடன் நம் நாட்டில் தொழில் ஆரம்பிப்பதற்கு செய்யப்பட்ட முதல் ஒப்பந்தம் இது.'

குறிப்பிட்ட ரேயான் தொழிற்சாலை ஏற்பாட்டிற்கு ஒப்புகொள்ளப்பட்டுள்ள மேற்படி அடிப்படையில்தான், மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை துவங்கவும், நெய்வேலியில் உரத் தொழிற்சாலை துவங்கவும் முயற்சிக்கப்பட்டுவருகிறது என்பது, அவர் தந்த விளக்கத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

தென்னக ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை பற்றிக் கூறியுள்ளதற்கொப்ப, இதுபற்றி மக்கள் சபையில் எழுந்த கேள்விகளுக்கும் பேரரசின் தொழில் மந்திரி பதில் தந்துள்ளார்.

மேற்குறித்த தொழில் ஒப்பந்த அடிப்படையில் மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்க பிரெஞ்சுத் தொழில் நிறுவனம் ஒன்று விருப்பமறிவித்திருப்பதாகவும், அதற்குரிய திட்டமொன்றையும் தந்திருப்பதாகவும், அதன்மீது பேச்சுவார்த்தை நடந்துவருவதாகவும் பேரரசின் தொழில் அமைச்சர் மக்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

அதுவுமன்றி, மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலைக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுவதாகவும், ஆண்டு ஒன்றுக்கு பத்தாயிரம் டன் அலுமினியம் உற்பத்தி செய்யக் கூடுமென்றும், அதே அமைச்சர் விவரம் கூறியுள்ளார்.

அதே அலுமினியத் தொழிற்சாலையைத் துவங்க, பிரெஞ்சு நாட்டு நிறுவனம் மட்டுமல்லாது, அமெரிக்கத் தொழில் நிறுவனம் ஒன்றும் விருப்பமறிவித்திருக்கிறது என்று, அந்த அமைச்சர் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் அலுமினியத் தேவை 40,000 டன் என்றும், ஆனால் உற்பத்தி செய்யப்பட்டு வருவதோ 12,500 டன்தான் என்றும் அந்த அமைச்சர் அறிவித்துள்ளார்.

அமைச்சரின் அறிவிப்புப்படி அலுமினியத் தொழிலுக்கு எதிர்காலத்தில் சிறந்த வளர்ச்சியும், உள்நாட்டிலேயே பெருந் தேவையும் இருக்கின்றன என்பது பெறப்படும். அலுமினியத் தொழில், நம்பிக்கையூட்டக் கூடியதாக இருந்துங்கூட, முதலீடு செய்ய வசதி இல்லை எனக் கூறி பேரரசு காலங் கழித்து வருவதின்மூலம், தமிழ்நாட்டை வறுமையில்கிடந்து வாடவிட்டு வைத்திருப்பது, அதன் ஓரவஞ்சனையைக் காட்டுவதாகவே இருக்கிறது. நிற்க.

ஆனால் சென்னை தொழில் அமைச்சரோ, இதை எல்லாம் வெளிப்டையாகக் கூறாது, அலுமினியத் தொழிற்சாலை இல்லை — உரத் தொழிற்சாலை கிடையாது என்று சுருக்கமாகக் கூறிவிட்டிருக்கிறார். மேற்படி தகவல்கள் சென்னை அமைச்சருக்குத் தெரியுமோ தெரியாதோ என்பது ஒருபுறமிருக்க, இத்தொழில் முயற்சிகள் அனைத்தும் பேச்சளவுடன் நிற்கக் கூடியதுதான் — செயலளவில் நிறைவேற்ற இந்தியப் பேரரசு ஒருநாளும் ஒப்பாது என்ற உண்மையை இவர் தெரிந்துகொண்டு இருப்பதினால்தான், நடைபெற முடியாத தொழில் முயற்சிகளை ஏன், வீணே குறிப்பிடுவது என்று இருந்த சென்னை அமைச்சர், இவை பற்றி மூச்சுவிடாது இருந்துவிட்டாரோ, என்னவோ? யார் கண்டார்கள்? நம்பிக்கை அளவில் இருப்பவை செயல் உருவம் பெறுமா?

எங்களை ஏன் தொல்லைப்படுத்துகிறீர்கள்?

நீங்களே உற்பத்தி செய்து சாப்பிட வேண்டும்

உணவுக்கு எங்களை எதிர்பார்க்கக் கூடாது

மாநிலங்கள் மீது சீறி விழுகிறார் மத்திய மந்திரி

புதுடில்லி, டிச. 19—

"உணவு வேண்டும் என்று எங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது; நீங்களே உற்பத்தி செய்து சாப்பிட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, எங்களை வந்து உணவு கேட்டுத் தொல்லை தரக்கூடாது"

என்று, டெல்லி மந்திரி ஜெயின், மாநிலங்கள்மீது சீறிவிழுந்திருக்கிறார்!

"எந்த ஒரு மாநிலமும் மத்திய சர்க்காரை நம்பிக்கொண்டிருக்கக்கூடாது; மத்திய சர்க்காரும் அன்னிய நாடுகளை உணவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது"

என்றும் மாநிலங்கள் சபையில் அவர் கூறினாராம்!

"நாம் இறக்குமதி செய்யும் பழக்கத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கைவிட்டுவிட வேண்டும்; அமெரிக்காவில், உபரியாக இன்று உணவு கிடைக்கிறது. இந்த நிலைமை நீடிக்கவும் செய்யலாம் —இல்லாமலும் போகலாம்; அப்படி இல்லாமற்போய்விட்டால் நாம் என்ன செய்வது?"

என்றும் அவர் கேட்டாராம்!

பல்கலைக் கழகப் போதனை மொழி :

'ஆங்கிலத்தை அவசரப்பட்டு கைவிடக்கூடாது'

பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசுகளை ஏற்கிறது

புதுடில்லி, டிச. 19—

பல்கலைக் கழக மட்டத்தில் போதனை மொழியாக இருந்து வரும் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஏதாவது ஒரு இந்திய மொழியை கொண்டுவரும் மாற்றம் அவசரப்பட்டதாக இருக்கக்கூடாது என்று, பல்கலைக் கழக மானியக் கமிஷன் நியமித்த விசாரணைக் குழு எச்சரித்திருக்கிறது.

அப்படி மாற்றம் செய்யப்பட்டாலும், பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரும் ஆங்கிலத்தை ஒரு இரண்டாம் மொழியாக கட்டாயமாகக் கற்கவேண்டும் என்றும், பண்டிட். எச். என். குன்ஸ்ரு தலைமையில் அமைந்த அந்தக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

அடிப்படைக் கல்வி—அதாவது ஆதாரக் கல்வி மட்டத்திலிருந்தே, ஆங்கிலம் குறைந்தபட்சம் ஆறாண்டுகளுக்கு போதிக்கப்படவேண்டும் என்றும் குழு கூறியுள்ளது.

பேராசிரியர் சித்தாந்தா, எம். வி. அய்யப்பன் பிள்ளை, சாமுவேல் மத்தாய் ஆகிய மூவரையும் உறுப்பினராகக் கொண்டிருந்த அந்தக் குழு, ஆங்கிலத்தில், பல்கலைக்கழகப் போதனைமொழியாக, வேறு இந்திய மொழிகளைக் கொணருமுன் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் பற்றி விளக்கிவிட்டு, ஆங்கிலம் இன்று பயன்பட்டுவரும் துறைகளையும், அது தொடர்ந்து இந்திய மாணவர்களால் கற்கப்படவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தியுள்ளது.

குழுவின் சிபாரிசுகளை, பல்கலைக் கழக மானியக் குழு ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

பண பலம் தேட முற்பட்டுவிட்டனர்

புதுடில்லி, டிச. 20—

இந்தியப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள எல்லா காங்கிரஸ்காரர்களும் தங்கள் ஊதியத்தில் 10 சதவிகிதத்தை, காங்கிரஸ் கட்சி வளர்ச்சிக்குத் தரவேண்டும் என்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்துள்ளதாம்.

பெரும் தொழிலதிபர்களும், பணமூட்டைகளும் காங்கிரசில் மலிந்திருப்பதை மறைப்பதற்காகவே இந்தப் பணம் தேடும் படலத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று டெல்லி வட்டாரத்தில் பேச்சு நிலவுகிறதாம்.

பம்பாய்--கேரள சாலை

மத்திய சர்க்கார் ரூ. 7 இலட்சம் தருகிறது

புதுடில்லி, டிச. 18—

பம்பாயிலிருந்து கேரளம் செல்லும் மேற்குக் கடற்கரைச் சாலையை சீக்கிரமாக முடிப்பதற்காக, முழுச் செலவையும மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வதாகவும், இதற்காகக் கேரள சர்க்காருக்கு டெல்லி ரூ. 7 இலட்சம் தரசம்மதித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

1951-52-ம் ஆண்டில் சாலை போடும் வேலை துவங்கியது என்றும், இன்னும் பணமுடை காரணமாக வேலை முடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இயக்கம் தொடர்ந்து நடைபெறுமாம்!

பழைய நிலை மீண்டும் ஏற்படாது என்கிறார் பிரதமர்

ஜகார்த்தா, டிச. 20—

டச்சு, மேற்கு நியூகினியைப் பெறுவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள தற்போதைய இயக்கத்தை இந்தோனேஷியா தொடர்ந்து நடத்தும் என்றும், மீண்டும் டச்சுக்காரர்களுக்கு இந்தோனேஷியாவில் பழைய நிலை ஏற்படாது என்றும் பிரதமர் யுவாந்தா குறிப்பிட்டிருக்கிறார்.

1,200 டச்சுக்காரர்கள் கிழக்கு ஜாவாவிலிருந்து வெளியேற ஆயத்தமாகியுள்ளனர் என்று தெரியவருகிறது.

21 செண்ட்—ஒரு ரூபாய்!

புதுடில்லி, டிச. 20—

ஒரு ரூபாய்க்கு 21 அமெரிக்க செண்ட் சமம் என்றும், 0·186621 கிராம் தங்கம் சமம் என்றும், மக்கள் சபையில் உதவி நிதி அமைச்சர் பகத் தெரிவித்துள்ளார்.

அரிசியை மிச்சப்படுத்த

மேற்குவங்க மந்திரிகள் முயற்சி!

கல்கத்தா, டிச. 19—

மாநிலத்தில் அரிசி செலவாவதைக் குறைப்பதற்காக மேற்கு வங்க மந்திரிகள், வாரத்தில் மூன்று நாளைக்கு அரிசி சாப்பிடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்களாம்!

சில மந்திரிகள், அரிசி நிலை சீர்படும்வரை, அரிசி சாப்பிடும் பழக்கத்தையே விட்டுவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கின்றனராம்!

சாகுபடியாளர் சட்டம் அமுலாகிறது

20 இலட்சம் இலங்கைக் குடியானவர் நன்மை பெறுவர்

கொழும்பு, டிச. 20—

இலங்கையில் 20 இலட்சம் குடியானவர்களுக்கு நன்மை பயக்கும் புதிய சாகுபடியாளர் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே நிலவுடைமையாளருக்கு பங்கு தரவேண்டும்.

அந்நியப் பாங்கிகள்

ஆதிக்கம் அகற்றப்படுமாம் !

ஜகார்த்தா, டிச. 20—

இந்தோனேஷியாவின் பொருளாதாரத் துறையில் அந்நியப் பாங்கிகளின் ஆதிக்கத்தை அகற்ற அரசாங்கம் சட்டம் தயாரித்து வருகிறது என்று தெரியவருகிறது.

இடைக்கால உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுவருவதாக நிதி அமைச்சர் டாக்டர் சலாமத் தெரிவித்துள்ளார்.

நன்கொடைகள் மீது வரி விதிப்பாம்!

"நன்கொடைகள் மீது வரி போடும் யோசனையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது" என்று, மத்திய நிதியமைச்சர் டி. டி. கே. மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

அதிக உற்பத்தியின் இலட்சிய அளவு

வெற்றியா, தோல்வியா ?

புதுடில்லி, டிச. 20—

"முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் நிர்ணயிக்கப்பட்டிருந்த இலட்சிய அளவு 36,51,897 டன்; ஆனால் கிடைத்த அதிகப்படி உற்பத்தியோ 20,87,101 டன்தான்" என்று மக்கள் சபையில், உணவு விவசாய அமைச்சர் ஏ.பி.ஜெயின் கூறியிருக்கிறார்,

ரூ. 140 கோடிவரை அமெரிக்க உதவி!

இந்தியாவுக்குக் கிடைக்கும்?

வாஷிங்டன், டிச. 19—

இந்தியாவிற்கு 30 கோடி டாலர் வரை (சுமார் ரூ. 142·8 கோடி) பொருளாதார உதவி செய்ய, கொள்கை அளவில் அமெரிக்கா தயாராகிவிட்டதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் அதுபற்றி அறிவிப்பு வரும் என்றும் கூறப்படுகிறது.

சர்க்கார் ஏற்றுமதி-இறக்குமதி பாங்கியிலிருந்து ஒரு கணிசமான தொகை கடனாகவும், அபிவிருத்திக் கடன் நிதியிலிருந்து ஒரு தொகையும், உணவுப் பொருள்களாக ஒரு பகுதியும் ஆக மூன்று வகையில் உதவி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

‘அபிவிருத்தித் துறையில் தமிழ்நாடு பின்தங்கியிருப்பது உண்மையே’

சி. டி. தேஷ்முக்கும் ஒப்பளிக்கிருர்

பிற்பட்ட பகுதிகளுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என வற்புறுத்தல்

சேலம், டிச. 19—

சேலம் நகருக்கு வந்திருந்த பல்கலைக் கழகங்கள் உதவித் தொகைக் குழுத் தலைவரும், மத்திய அரசாங்க முன்னுள் நிதி அமைச்சருமான சிந்தாமணி தேஷ்முக் அவர்களுக்கும், அவருடைய மனைவி துர்காபாய் அம்மையாருக்கும் சேலம் நகராண்மைக் கழகச் சார்பில், நகராண்மைக் கழகத் தலைவர் பி. மதுரைப்பிள்ளை வரவேற்பு இதழ் ஒன்றை 14-ந் தேதி மாலை வாசித்தளித்தார்.

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் டாக்டர் சிந்தாமணி தேஷ்முக் குறிப்பிட்டதாவது:—

“சேலம் நகர் மலைகளால் சூழப்பட்டதால் முதலில் இந்த ஊர் ‘சைலம்’ என்ற பெயரில் வழங்கி வந்தது; பிறகு, ‘சேலம்’ என்று பெயர் மாறியது.

“3 ஆண்டுக்கால பட்டப் படிப்பு இந்த ஆண்டு முதல் கல்லூரிகளில் அமுலாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கல்வி முறைக்கு மத்திய அரசாங்கத்தினிடம் அனுமதி கொடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்களுக்குப் புதிய முறைப்படி சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

“இந்தியாவில் சேலம் நகராண்மைக் கழகம் ஒன்றுதான் கல்லூரியை நடத்திவருகிறது. பலவித கஷ்டங்களுக்கிடையில் இந்தக் கல்லூரியை நகராண்மைக் கழகத்தார் தொடர்ந்து நடத்திவருவது பாராட்டக்கூடியதாகும்.

“சேலம் மாவட்டத்தில்தான் சென்னை மாகாணத்திலேயே அதிக மக்கள் தொகை என்று கேள்விப்பட்டேன்; மக்கள் தொகையில்முன்னணியில் நிற்கும் சேலம் மாவட்டம், கல்வித் துறையில் மிகவும் பிற்போக்காக உள்ளது. சென்ற சில ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது; ஆகவே, அதற்குத் தக்கபடி, அதிகக் கல்லூரிகள் ஏற்பட வேண்டும்.

“அபிவிருத்தி வேலைகளுக்காக, இந்தியா முழுவதிலும் பணத்தைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பது என் கருத்து. சென்னை, ஆந்திரா, பீகார், உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி ஆகியவை மிகவும் பிற்போக்காக உள்ளன; ஆகவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பகுதிகளுக்கு அபிவிருத்தி வேலைகள் செய்ய அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். நெய்வேலி திட்டத்தைக் கொண்டு இரும்பு, அலுமினியம் முதலிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் ஏற்படும் என நம்புகிறேன்.”

துர்காபாய் அம்மையார் தனக்களித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

“சேலத்திற்கு 1931-லேயே வந்திருக்கிறேன். மக்கள் தொகையில் பெண்கள்தான் அதிகம். பெண்களில் 92 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிருர்கள். இவ்வாறு அதிகம் பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாது இருந்தால், தங்களுக்குள்ள வாக்குரிமைகளை எவ்வாறு நல்ல முறையில் பயன்படுத்த முடியும்? பெண்கள் கல்வியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

“மத்திய சமூகப் போர்டின் பெண்கள் நல இலாகா அபிவிருத்தித் திட்டத் தலைவியாக நான் பதவி வகித்தேன். பெண்களுக்கு அபிவிருத்து வேலைகள் செய்ய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 30 கோடி ஒதுக்கியிருக்கிருர்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் வழுக்கிவிழுந்த பெண்களை மீட்க ஒவ்வொரு விடுதி கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் விபசாரக் குற்றங்கள் அதிகரித்துவருவதைக் கண்டு வருந்துகிறேன்; இந்த நிலை மாற வேண்டும்.

“வெறும் உணவு உற்பத்தியை மட்டும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துப் பயனில்லை; நாளுக்கு நாள் அதிகரித்துவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.”

நகராண்மைக் கழக உதவித் தலைவர் ஆர். ராமகிருஷ்ணன் நன்றி கூறினுர். (ந-நி)

சிமெண்டில் மட்டும் ரூ. 5 கோடி இலாபமாம்!

புதுடில்லி, டிச. 20—

அதிக விலைக்கு சிமெண்டை விற்றதால் மட்டும் அரசாங்கத்திற்கு ரூ. 5 கோடி இலாபம் கிடைத்துள்ளது என்றும், இந்தத் தொகையை சாலைகள் சீரமைப்புக்குச் செலவிட அரசாங்கம் யோசித்துவருவதாகவும் மத்திய அமைச்சர் தேசாய், மக்கள் சபை தெரிவித்துள்ளார்.

சென்னை— ஆசீர்வாதபுரம் என். எஸ். கே. நினைவு மன்றத் திறப்பு விழா

சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., டி. வி. நாராயணசாமி கலந்துகோண்டனர்

சென்னை 10-வது வட்டம் ஆசீர்வாதபுரத்தில் நிறுவப்பட்டிருக்கும் கலைவாணர் என். எஸ். கே. நினைவு மன்றத்தின் திறப்பு விழா 15—12—57 மாலை தோழர் டி. கே. மாதவன் தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரைக்குப்பிறகு தோழர் உ. பில்லப்பன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் அறிவுப்பணிகளை விவரித்துப்பேசினுர்.

அடுத்து தோழர் அ. இராசகோபால் பேசுகையில், கலைவாணர் பெயரால் தோன்றியுள்ள இம்மன்றம் நல்லமுறையில் வளர்ச்சியடைய விழைவதாகக் கூறி, கலைவாணர் நாட்டுக்குச் செய்த நல்ல பல தொண்டுகளை எடுத்துரைத்தார்.

பிறகு, 10-வது வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் வீ. தமிழ்தாசன் பேசுகையில், மன்றத்தின் சீரிய நோக்கத்தை விளக்கி, கலைவாணரின் தொண்டுகளைப் பாராட்டினுர்.

அடுத்து, தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவரும், நடிகருமான தோழர் என். எஸ். நாராயணன் அவர்கள், கலைவாணரின் அரிய சேவைகளையும், அவரால் நாட்டுக்கும், கலையுலகுக்கும் ஏற்பட்ட நற்பலன்களையும், நகைச்சுவைபட அழகுற எடுத்துரைத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் ஏழ்மை நிலையிலிருந்து எப்படி தன் முயற்சியினுல் உயர்ந்தநிலை யெய்தினுர் என்பதையும், கலையுலகில் அவர் கையாண்ட நுணுக்கங்களைப்பற்றியும், பகுத்தறிவு கருத்துக்களைப் பரப்பியவிதத்தையும் பல மேற்மேற்கோள்களுடன் எடுத்துக் கூறினுர். ரூ 13½ இலட்சத்துக்கு மேல் பணத்தை வாரி வாரி வழங்கியுள்ள கலைவாணரின் கொடையுள்ளத்தைப் பாராட்டினுர்.

அடுத்து, டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ, அவர்கள் பேசுகையில், என். எஸ். கே. அவர்கள் ஏழை மக்களுக்கு—குறிப்பாக ஆதித்திராவிட மக்களுக்குக் கல்வியளிக்கப்படவேண்டும் என்பதை ‘கிந்தனுர்’ காலட்சேபம் மூலம் வற்புத்தியதை எடுத்துக்காட்டி, அவர் செய்த பல அரிய பணிகளை விளக்கினுர்.

அம்மையார் தொடர்ந்து பேசுகையில், சட்டசபை நிகழ்ச்சிகளையும், தி. மு. கழகப் பணிகளையும் விவரித்தார்.

இறுதியாக, நடிகமணி டி. வி நாராயணசாமி அவர்கள் கலைவாணரின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டுப் பேசுகையில், ‘சாதி ஒழியவேண்டுமென்று அந்தக் காலத்திலிருந்தே உழைத்தவர் கலைவாணர்; அவர், குருட்டுப் பழக்கவழக்கங்களை வேரோடு களையவேண்டுமென்று பாடுபட்டவர்; அண்ணு அவர்களிடமும், பெரியாரவர்களிடமும் பேரன்பும் மதிப்பும் வைத்திருந்தவர்’ என்று என்று கூறினுர்.

கலைவாணர் அவர்கள், எல்லாக் கட்சிக்காரர்களிடத்திலும் அன்புடன் பழகியபோதிலும், தி. மு. கழகக் கொள்கையிடத்து அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்ததற்கான பல எடுத்துக்காட்டுகளைக் கூறி, தேர்தல் காலத்தில் தி. மு. கழக வெற்றிக்கு கலைவாணர் ஆற்றிய பணிகளையும் குறிப்பிட்டார்.

எப்படிப்பட்ட இக்கட்டான நேரத்திலும் கொள்கையை விட்டுக் கொடுக்காதவர் கலைவாணர்; அவர் யாருக்கும், எப்பொழுதும் அஞ்சாமல் தன் கொள்கைக்காகப் போராடுபவர் என்பதையும் ஆதாரங்களுடன் கூறி விளக்கினுர்.

தோழர் என். எஸ். நாராயணன் அவர்கள் கலைவாணர் படத்தையும், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் என். எஸ். கே. மன்றத்தையும் திறந்துவைத்தார்கள்.

கலைவாணரின் உருவப் படத்துக்கு, ‘கண்ணகி சைக்கிள் ஒர்க்ஸ்’ சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

சென்னை-இராயப்பேட்டைமுத்தமிழ் முன்னேற்றமன்றப்பொதுக்கூட்டம்

அண்ணு, ஆசைத்தம்பி கலந்துகோண்டனர்

சென்னை — இராயப்பேட்டை முத்தமிழ் முன்னேற்ற மன்றத்தின் சார்பில் 10—12—57 மாலை ஓர் மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் பெ. இராசாராம் தலைமை வகித்தார். அண்ணு, தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ஆர். எஸ். பாண்டியன் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

தலைவர் தம் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கங்களை விளக்கினுர்.

தோழர்கள் வைத்தியநாதன், வெற்றிவீரன் ஆகியோர் கழக இலட்சியங்களை விளக்கினர்.

அடுத்து, தோழர் கோ. இளவரசு பேசுகையில், இராயப்பேட்டையில், கடைத்தெருச் சாலை என்றிருப்பதை, மக்கள் விருப்பத்துக்கு மாருக ‘கௌடிய மடம் சாலை’ என நகரசபையார் மாற்றியுள்ளதை வன்மையாகக் கண்டித்தார்.

அடுத்து, தோழர் சு. லோகநாதன் பேசுகையில், வட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைய வட்டக் கவுன்சிலர் முயற்சி எடுக்க முன்வாராதது குறித்து கண்டித்ததுடன், முத்தமிழ் முன்னேற்ற மன்றம் மேற்கொண்டுள்ள பணிகளை விவரித்தார்.

பிறகு தோழர் ஆர்.எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசுகையில், இந்திய சர்க்கார் அடிக்கடி தந்துவரும் உறுதி மொழிகளுக்கு மாருக இந்தியைத் திணிப்பதை வன்மையாகக் கண்டித்தார்.

அடுத்து, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் இந்தியை நாம் ஏன் எதிர்க்கிறோம் என்பதையும், நாம் முன்பு இந்தியை எதிர்த்துப் போராடியதைக் குறித்தும் எடுத்து விளக்கிவிட்டு, சட்டசபையில் முதுகுளத்தூர் பிரச்சினை வந்தபோதும், தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் வந்தபோதும் தி. மு. கழகம் நடந்துகொண்ட விதத்தையும்கூறி, கம்யூனிஸ்டுகள் கூறும் புகாருக்கு மறுப்புரைத்தார். இறுதியாக, திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினுர்.

இறுதியாக அண்ணு அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினுர்கள் (பேச்சு முன்னரே வெளியாகியுள்ளது).

அண்ணு அவர்களுக்கு முத்தமிழ் முன்னேற்ற மன்றம், ஆயிரம் விளக்கு பன்னீர்செல்வம் வாசகசாலை, எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றம், 37-வது வட்டத் தி. மு. க. கிளை, ஆல் தோட்டம் கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுக் கழகம், ‘தனி அரசு’ அச்சகம் ஆகியவை சார்பில் கைத்தறித் துண்டுகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத் துவக்கத்தில், டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை வழங்கினுர்.

வண்டிப்பெரியாரில் மு. கருணநிதி

தோட்டத் தொழிலாளர் மாபெரும் வரவேற்பு

கடந்த 1—12—57-ல் கோளம் வண்டிப்பெரியார் தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம், திருச்சி தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தோழர்கள் துறையூர் டி. பி. அழகமுத்து, கே. எச். எம். சுபேர் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், பீர்மேடு—தேவிகுளம் தாலுகாக்களில் தி. மு. கழகச் சார்பில் தொழிற்சங்கம் அமைத்ததின் நோக்கங்களை விவரித்து தோழர் கே. ஏ. கலையழகன் பேசினுர்.

பின்னர், தோழர் மு. கருணநிதி எம்.எல்.ஏ. அவர்கள், ‘மலையாளம் பிளாண்டேஷன்ஸ் தொழிற் சங்க’த்தைத் துவக்கி வைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினுர்.

பொதுக்கூட்டத்திற்குச் செல்லும் வழியில், சோத்துப்பாறை, வாழையடி, நெல்லிமலை, சுரக்குளம், பெரியார்தோட்டம் ஆகிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் தோழர் கருணநிதி அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து, வரவேற்பளிக்கப்பட்டது; தொடர்ந்து, செங்கரை, மஞ்சுமலை, அர்னக்கல், பசுமலை, இல்லாசி, கடைசிக்காடு, பட்டுமலை, போனுமி, மவுண்ட், சபரிமலை, வாகமண், கொடுவாகர்ணம் ஆகிய தோட்டத் தொழிலாளர்களால் கைத்தறித் துண்டுகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியாக நகர தி. மு. கழகச் சார்பில் செங்கரை செல்வம் அவர்களாலும், அர்னக்கல் ‘ஸ்டார்ஸ் கிளப்’ சார்பில் திரு செல்லையா அவர்களாலும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

பின்னர் தோழர் கருணநிதி அவர்கள், சொற்பொழிவாற்றுகையில், வடநாட்டார் தமிழகத்தை மட்டும் அடிமைப்படுத்தி வைக்கவில்லை — கம்யூனிஸ்டுகள் ஆட்சி நடத்தும் கோளத்தையும் தான் அடிமைப்படுத்தி இருக்கிருர்கள் என்றும், நாம் கோரும் திராவிட நாடு கோளம்—தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம் ஆகிய நான்கு மொழிவழி நாடுகள் இணைவழி ஒன்றுபட்ட கூட்டாட்சி நாடுதான் என்றும், அகில இந்திய அடிப்படையில் இயங்கும் எல்லா அரசியல் கட்சிகளும் தென்னுட்டை வாழவைக்க முடியாது என்றும், தி. மு. கழகச் சார்பில் கோள மக்களும் சுதந்தா திராவிடம் அமைக்க ஒன்றுதிரளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு,’ தொழிற்சங்கத்தைத் துவக்கிவைத்தார். நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

மக்களுடன் தொடர்பு கொள்ள !

அமைச்சர்கள் இயக்கம் நடத்துவராம்

ரெய்ப்பூர், டிச. 19—

மாநிலத்தின் ஒவ்வொரு மந்திரியும், உதவி மந்திரியும் தங்கள் தங்கள் தொகுதியில், குறைந்தது ஒரு கூட்டுறவு சங்கமேனும் துவங்கவேண்டும் என்று முடிவாகியிருப்பதாக, மத்தியப் பிரதேச முதன் மந்திரி டாக்டர் கே. என். கட்ஜு பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிருர்.

மக்களுடன் தொடர்பு

மந்திரிகளும், உதவி மந்திரிகளும், சீக்கிரமே ‘மக்களுடன் தொடர்பு’ கொள்ளும் இயக்கம் ஒன்றில் ஈடுபடப்போவதாகவும், அதுபோது, கூட்டுறவு இயக்க வளர்ச்சியைத் தீவிரப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்றுதான் அவர்களைக் கேட்டிருப்பதாகவும் கட்ஜு கூறினுராம்.

காசநோய்க்காரர்களுக்கு மருந்து விநியோகம்

விதிமுறையில் திருத்தம்

சென்னை, டிச. 20—

மருத்துவ உதவிபெறத் தகுதியான காச நோய்க்காரர்களுக்கு ஒரே சமயத்தில் ஒரு வாரத்திற்கான மருந்தை விநியோகம் செய்யலாம் என, அரசாங்கம், மருத்துவ உதவி முறைகளைத் திருத்தியுள்ளது.

ஒரே சமயத்தில் 2 நாள் மருந்துக்குமேல் கொடுக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு, பிணியால பாதிக்கப்பட்டவர்களை அல்லலுக்குட்படுத்துவதாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஏழை நோயாளிகள், என். ஜி. ஓ.-க்கள்—அவர்கள் குடும்பத்தினர், மாதம் ரூ. 300 சம்பளத்துக்கு மேற்படாத உள்ளாட்சிக் கழக ஊழியர்கள்-அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு இந்தத் திருத்தம் வசதி அளிக்கிறது.

காய்கறி உற்பத்தி

கூட்டுறவு சங்கம் மேற்கோள்ளும்

சென்னை, டிச. 19—

நகரிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள பிச்சிவாக்கம் என்ற கிராமத்தில், காய்கறி உற்பத்திக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் நிறுவப்படும் என்று தெரிகிறது.

இந்தச் சங்கம் நகரில் உள்ள உணவு விடுதிகளுக்கு காய்கறி ‘சப்ளை’ செய்யுமாம்.

முதலில் 50 ஏக்கரில் காய்கறி விளைவிக்கப்படும் என்றும், பின்னர் 200 முதல் 300 ஏக்கர்வரை பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

இங்கு விளையும் காய்கறியை நகரத்திற்கு எடுத்துச் செல்ல லாரிகள் ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

பஞ்சாப் அரசாங்கத்தினர் திடீர் உத்தரவு!

சந்திகார், டிச. 21—

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் வயதானவர்கள், உடல் குறைபாடு உள்ளவர்கள், பிணியால் பீடிக்கப்படுபவர்கள், விசாரணையில் இருப்பவர்கள். குறிப்பாகப் பெண்கள் ஆகியவர்களை விடுதலை செய்யுமாறு பஞ்சாப் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

"பெண் கைதிகள் வீட்டிற்குப் போய் சமைக்கட்டும்; அவர்களைச் சிறையில் அடைத்து அரசாங்கம் ஏன் சமைத்து போடவேண்டும்?" என்று, முதலமைச்சர் வேடிக்கையாக நிலைமையை விளக்கியுள்ளார்.

புதிய முறையில் இரண வைத்தியம்!

சென்னை டாக்டர்களின் அரிய சாதனை

சென்னை, டிச. 20—

நோயாளிகளின் வெப்ப நிலையைப் பனிக்கட்டிகளின் மூலம் தணியவைத்து, மூளையிலும், இருதயத்திலும் மிகவும் சிக்கலான இரண மருத்துவம் செய்யும் புதிய முறையில் சென்னை மருத்துவர்கள் வெற்றி கண்டுள்ளனர் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இந்த முறைப்படி, கடந்த திங்களில் 12 பேர்களுக்கு வெற்றிகரமாக இரண மருத்துவம் நடைபெற்றிருக்கிறதாம்!

கழகக் கூட்டங்கள்

★

விசலூர்:

(குடந்தை வட்டம்)

22—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. கே. ஈ. அப்துல்லா

பேசுவோர்:

போன்-தருமன்
சி. கிருட்டினமூர்த்தி
என். சாமிநாதன்

விசலூர்: வலங்கைமானிலிருந்து வடக்கே ஒரு மைல்

★

திருமுட்டம்:

என். எஸ். கே. திடலில்

24—12—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: இரா. தட்சிணாமூர்த்தி

பேசுவோர்:

அண்ணு
தில்லை-வில்லாளன்
போன்-சோக்கலிங்கம்
கூ. ஆறுமுகம்
செல்வி-இளங்கோ
இரா. சக்கரவர்த்தி

இசை: நாகூர் அனீபா

சிதம்பரம் வட்டத்தில் அண்ணு

★

டிச.

23: மாலை 6 மணி—பழைய நல்லூர் பொதுக்கூட்டம்

24: காலை 9 மணி—பிச்சாவரம் பகுதி

மாலை 3-30 மஞ்சக்கொல்லை கழகக் கட்டிடத் திறப்பு விழா; பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

,, 4 மணி—மீராளூர்—பாஞ்சாயத்து போர்டு வரவேற்பு; கழகத் துவக்க விழா

,, 4½ மணி—புடையூர் சோழத்திரம்பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

,, 5 மணி—திருமுட்டம் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

,, 6 மணி—பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் தோழர்கள் தில்லை-வில்லாளன், எம் செல்வராஜ் எம் எல்.ஏ., ஆனந்தன்எம்.எல் ஏ, போன்-சோக்கலிங்கம், இரத்தின பாலகுருசாமி, இரா. சக்கரவர்த்தி, புலவர் ஆறுமுகம், செல்வி-இளங்கோ, இரா. தட்சிணாமூர்த்தி முதலியோர் கலந்துகொள்வர்.

குறிப்பு:— இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் நாகூர் அனீபா இன்னிசை உண்டு.

சிவகாசி தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு:

22—12—57 மாலை 4 மணிக்கு சாத்தூர் ரோட்டில் உள்ள கே. வி. கே. சாமி படிப்பகத்தில், கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

பந்தநல்லூர் தி.மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

22—12—57 காலை 9 மணியளவில் தோழர் எங்கண்ணன் தையல் நிலையத்தில், தோழர் பி. ஏ. லிங்கன் தலைமையில் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

குமரவேல் நினைவு மன்ற பொதுக்கூட்டம்

22—12—57 மாலை 6 மணிக்கு திருக்கோகர்ணம் சத்தியமூர்த்தி திடலில், தோழர் பி. அந்தோணி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் டி கே. தாமரைச்செல்வன், பா. செழியன், க. ஞானமுத்து ஆகியோர் பேசுவர்; தோழியர் பி கே விஜயராணி இன்னிசை வழங்குவார்.

தாழ்த்தப்பட்டோர் நிலை உயர்த்த!

மாநில மந்திரிகளின் மாநாடு கூட்டுகிறது டில்லி

புதுடில்லி, டிச. 20—

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரக் கஷ்டங்களையும் சமூகப் பிரதிகூலங்களையும் துரிதமாகக் களைவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன், டில்லி சர்க்கார், மாநிலங்களின் தாழ்த்தப்பட்ட இலாகா மந்திரிகள், அதிகாரிகள் அடங்கிய மாநாடு ஒன்றினைக் கூட்டுகிறது என்று உள்நாட்டிலாகா மந்திரி பி. என். தத்தார், மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

இரண்டாம் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென ரூ. 91 கோடிவரை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இதில் ரூ. 60 கோடிவரை மத்திய சர்க்கார மேற்கொள்ளும் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு உதவுவதற்கென சென்னை சர்க்கார் அதிகப் பணம் தேவை எனக் கேட்டிருக்கின்றனர் என்றும், பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களானாலும், மறவர்களானாலும் அவர்களுக்கு நல்ல வாழ்வு பெற்றுத் தருவதற்காக மத்திய சர்க்கார் நிதி உதவத் தயாராகவிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

'இடைக்கால நிவாரணம் திருப்திகரமானதல்ல'

மத்திய ஊழியர் சங்கத் தலைவர் விளக்கம்

புதுடில்லி, டிச. 20—

"மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிராக்கிப்படியில் (மாதம் ரூ. 5 அதிகம்) அளிக்க அரசாங்கம் செய்துள்ள முடிவும், முறையும் திருப்திகரமாக இல்லை" என்று மத்திய அரசாங்க ஊழியர் சங்கத் தலைவர் திரு. நாத்பாய் தெரிவித்துள்ளார்.

"இரண்டு இலட்சத்திற்குமேற்பட்ட ஊழியர்களுக்கு இந்தக் குறைந்த அளவு நிவாரணம் கூடத் தரப்படவில்லை; நேரடியாக இலாகாவுடன் தொடர்பு கொள்ளாத ஊழியர்களுக்கும், தினசரி ஊதியம் பெறுபவர்களுக்கும், தற்காலிக ஊழியர்கள், ஓய்வு பெறுபவர்களுக்குப் பதில் வேலை செய்பவர்கள, இந்திய தப்புறவு ஊழியர்கள் ஆகியோருக்கு இந்த இடைக்கால நிவாரணம் அமுலாக்கப்படாததும் வருந்தத்தக்கது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

செயற்கை வைரத் தொழிற்சாலை திறப்பு

கோவை, டிச. 21—

கோவை மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையத்தில் செயற்கை வைரத் தொழிற்சாலையை மத்திய கனரகத் தொழில் அமைச்சர் ஷா திறந்துவைத்துள்ளார். இந்தத் திட்டத்திற்கு ரூ. 22 இலட்சம் செலவிடப்படுமாம். இந்தியாவுடன் கூட்டாக சுவிட்சர்லாந்து, இந்தத் தொழிற்சாலையை நிறவியுள்ளது.

சென்னை கவர்னரின் தனி உத்தரவு

சென்னை, டிச. 19—

சென்னை புகையிலை (விற்பனை, பதிவு, பங்கீடு) சட்டப்படி, கை யிருப்பில் விற்பனைக்காக உள்ள புகையிலைக்கும் 'கலால் வரி' விதிக்க தனி உத்தரவு ஒன்றை சென்னை கவர்னர் பிறப்பித்துள்ளார்.

பாகிஸ்தான் சர்க்கார் புதிய உத்தரவு

டாக்கா, டிச. 21—

தனித் தொகுதி அடிப்படை வாக்காளர் பட்டியல் தயாரிப்பதை நிறுத்திவைக்குமாறு பாகிஸ்தான் அரசாங்கம உத்தரவு பிறப்பித்துள்ளது என்று தெரியவருகிறது.

மதுரையில் சிறப்புச் சொற்பொழிவு

22—12—57 காலை 10 மணிக்கு மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் பழனி டாக்கிசில் டாக்டர் மா. இராசமாணிக்கனர் தலைமையில் தோழர் கண்ணதாசன் 'படைத்தவன் கடவுள்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

இந்தியாவுக்கு 4 லட்சம் டன் கனடா கோதுமை

புதுடில்லி, டிச. 20—

இந்தியாவுக்கு 4 இலட்சம் டன் கோதுமையைத் தருவதற்குக் கனடா முன்வந்துள்ளது. இதற்கான தொகையை உடனடியாக இந்தியப் பேரரசு தரும் நிலையில் இல்லாததால் மெதுவாகத் தருவதற்கு வழியளிக்கப்பட்டுள்ளதாம்.

கே. கே. நீலமேகம்

சென்னை, டிச. 21—

சொந்த வியாபார வேலையாக கடந்த 6—12—57-ல் தெலுங்கு நாடு சென்றிருந்த குடந்தை திரு. கே. கே. நீலமேகம் அவர்கள், இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார்கள்.

அண்ணு அவர்களைக் கண்டு விட்டு, இரவு புறப்பட்டு குடந்தை செல்வார்கள் எனத் தெரிகிறது.

சென்னைக் கல்விச் சங்கம்

22—12—57 மாலை 5 மணிக்கு பட்டாளம் ஸ்டாரன்ஸ் ரோடு, ஆண்பள்ளியில் 'இலக்கிய மாண்பு' என்னும் பொருள் பற்றி திரு. கு.வே. இராமகோடி தலைமையில் திரு. வ. சுப்பிரமணியம், திரு. தெ. இரா. ஜெயராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இலவசப் பால் விநியோகம்

22—12—57 காலை 8 மணியளவில் சென்னை—8-வது வட்ட மக்கள் மன்றச சார்பில், சென்னை—பெத்தநாய்க்கன்பேட்டை சுந்தர முதலி தெருவில், தோழர் சு. சந்திரசேகர் தலைமையில் குழந்தைகளுக்கு பால் வழங்கப்படும்.

இளங்கோ கலை மன்றம் (அண்ணு கல்வி அகம்) செயற்குழு உறுப்பினர்களுக்கு:

22—12—57 காலை 9 மணிக்கு மன்றப் பணிமனையில் (எண் 31, நாராயணப்ப நாய்க்கன் தோட்டம் 7-வது சந்து, வண்ணை) வரவு செலவு கணக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பெரியநாயக்கன்பாளையம் மூவேந்தர் படிப்பகஉறுப்பினர்கட்கு:

22—12—57 இரவு 7 மணியளவில் படிப்பகப் பணிமனையில், செயற்குழு—பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

22—12—57 காலை 10 மணியளவில் சென்னை—8-வது வட்ட மக்கள் மன்றப் பணிமனையில் (எண் 17, திருப்பள்ளித் தெரு), தோழர் ச. சிவகுமாரன் தலைமையில், 'உலக சூழ்நிலையில் நாம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

22—12—57 மாலை 6 மணிக்கு காட்டுமன்னார்குடி சத்தியவாணி முத்து சொற்பயிற்சி மன்ற அலுவலகத்தில், 'இன்றைய அரசியல் நிலை' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

22—12—57 மாலை 6 மணிக்கு கோடம்பாக்கம்—புலியூர் அறிவு வளர்ச்சி மன்றத்தில் ஸ்டண்ட் சாமிநாதன் தலைமையில், தோழர்கள் பால்வண்ணன், மு. ரா. குமார் ஆகியோர், 'தமிழகம் தாழ்ந்தது ஏன்?' என்பது பற்றிப் பேசுவர்; மாலை 5 மணிக்கு புலியூர் கிராம இளைஞர்கள் இன்னிசை விருந்தளிப்பர்.

★★

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு

27, 28-12-57 வெள்ளி, சனிக்கிழமைகளில்

நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன் கோவிலில்

கலைவாணர் பந்தலில்—சாமி அரங்கில் நடைபெறும்.

★

தலைவர்: ஈ. வெ. கி. சம்பத் M.P. | திறப்பாளர்: டாக்டர் ஏ. அருணுசலம்

27-12-57 வெள்ளி:

★

பிற்பகல்:

ப. உ. சண்முகம்
இரெ. இளம்வழுதி
சு. வன்னியப்பெருமாள்
தோழியர் பங்கயற்செல்வி
நாஞ்சில் சேவியர்
எஸ். எஸ். இராசேந்திரன்
மு. கருணுநிதி

இரவு:

எம். கே. கோவிந்தராச பாகவதர்

அவர்களின் தீந்தமிழ்ப் பாடல்கள் மக்களை இன்பவெள்ளத்திலாழ்த்தும்.

28—12—57 சனி:

★

காலை:

காஞ்சி-கல்யாணசுந்தரம்
பி. சாம்
சத்தியவாணிமுத்து
நாஞ்சில்-அன்பெழில்
வி. பி. இராமன்
தர்மலிங்கம் எம்.பி.
சி. பி. சிற்றரசு
கண்ணதாசன்

பிற்பகல்:

எம். எஸ். இராமசாமி
என். வி. நடராசன்
டி. வி. நாராயணசாமி
இரா. செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
இரா. நெடுஞ்செழியன்
அண்ணு

இரவு:

சென்னை தோழமை நாடக மன்றத்தினரின் **'மனித இதயம்'** நாடகம் (சென்னை—ஜார்ஜ் திட்டியது) நடைபெறும்.

மாநாட்டின் இரு நாட்களிலும் **நாகூர் அனீபாவின்** இன்னிசை உண்டு.

ஒலி, ஒளி ஏற்பாடுகள்: திருச்சி ராபி அவர்கள்.

ஏ. இராமசாமி, பி. சாம் B.A., B.L.
செயலாளர்கள்

கி. மனோகரன் M. A.
வரவேற்புக்குழுத் தலைவர்

★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.